# பாதாள குழுக்களின் ரூ.300 கோடி

**சொத்துக்கள் பறிமுதல்**

பாதாள மற்றும் போதை வியாபாரத்துக்கு எதிராக 6 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கை காரணமாக பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளால் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட 300 02

https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

24th DECEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 59



## 12 பேருடன் ரொஷான்

04

# எழுந்து வரும் ஓர் எதிர்க்கட்சி : அரசுக்கு பேராபத்து

## -இராணுவ புலனாய்வு அறிக்கை திடுக்கிடும் தகவல்-



எதிர்கட்சிகளில் ஒன்று கடும் வளர்ச்சி கண்டு வருவதாகவும் அது எதிர்வரும் தேர்தலில் அரசுக்கு பெரும் சாவாலாக அமைய முடியும் என்றும் இராணுவ புலனாய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இராணுவ புலனாய்வின் உயர் அதிகாரி ஒருவர் இந்த அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த கட்சி நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் பிரபல்யமாகி வருகிறது எனத் தெரிவித்துள்ள அந்த அறிக்கை,இது மேலும் வளர்ச்சியடைந்தால் எவ்வாறான பாதிப்பை அரசுக்கு ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது,

02

# தரமற்ற மருந்து பொருட்கள் இறக்குமதி: கெஹலியவிடம் சி.ஐ.டி விசாரணை

தரம் குறைந்த மருந்து பொருட்களை இறக்குமதி செய்தமை தொடர்பில் சுகாதார முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வலவிடம் சி.ஐ.டியினர் விசாரணை நடத்தவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறி சந்த்ர குப்தா சி.ஐ,டிக்கு வழங்கிய ரகசிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இந்த விசாரணை இடம்பெறவுள்ளது என்று தெரிய வருகிறது.

தனக்கு அமைச்சர் கெஹலிய வழங்கிய உத்தரவுக்கு ஏற்பவே இந்த இறக்குமதி இடம்பெற்றது என்று சந்திர குப்தா சி.ஐ.டியிடம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு ஆபத்து: குறைகின்றன விடுமுறை தினங்கள்

## 25 ஆக மாறும் 45 நாட்கள்...

அரச ஊழியர்களின் விடுமுறை நாட்களை குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அரச உள்வட்டாரத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

அதன்படி தற்போதைய 45 நாட்கள் விடுமுறை 25 நாட்களாக மாறும் ஆபத்து உள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்,ஓய்வூதியத்துக்குத் தகுதி பெரும் காலத்திலும் மாற்றம் ஏற்படவுள்ளது.15 வருடங்கள் சேவை செய்தால் மாத்திரமே ஓய்வூதியத்துக்கு தகுதி பெறலாம்.

அரசின் செலவுகளில் 11.4 வீதமாக உள்ள ஓய்வூதிய செலவைக் கட்டுப்படுத்துவதற்காக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத் டி டயஸ் 40 யோசனைகளை முன்வைத்துள்ளார். அதிலேயே மேற்படி விடயமும் அடங்கியுள்ளது.



புது சுடர்
www.puthusudar.lk
2023 DECEMBER 24 - SUNDAY

# இத்தோடு முடியக்கூடாது

அரசு நினைத்தால் எப்படிப்பட்ட குற்றச் செயல்களையும் முடிவுக்குக் கொண்டு வர முடியும்-பூஜ்ய மட்டத்துக்குக் கொண்டு வர முடியும் என்பதற்கு கடந்த ஆறு நாட்கள் அரசு மேற்கொண்ட பாதாள மற்றும் போதை பொருள் வியாபாரிகளுக்கு எதிரான விசேட ஒப்பரேஷன் நிரூபிக்கிறது.

பொலிஸ் அமைச்சர் டிரான் அலசின் உத்தரவின் பேரில் புதிய பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நடத்திய இந்த ஆட்டத்தால் பல பாதாள உலக சந்தேக நபர்கள்-தேடப்பட்டு வந்தவர்கள்-போதைப்பொருள் வியாபாரிகள் என பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு நாட்களுக்குள் அவர்களிடம் இருந்து 300 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அரசு அண்மைக் காலமாக எடுத்து வரும் பல திட்டங்களில் மக்களுக்கு உடன்பாடு இல்லை.காரணம் அவை எல்லாம் பொருளாதாரரீதியாக மக்களை நசுக்கக்கூடியவை.ஆனால்,இப்போது நடத்திய இந்த 6 நாள் ஆட்டம் மக்களுக்கு முக்கியமானது.மக்கள் விரும்புவது.

இப்போது கைப்பற்றப்பட்டிருக்கும் சொத்துக்கள் மக்களுடையவை .மக்களை போதைப்பொருளுக்கு அடிமனையாக்கி அவர்களின் பணத்தைப் பெற்று வாங்கப்பட்ட சொத்துக்களும்-பணக்காரர்களை மிரட்டி கப்பமாகப் பெறப்பட்ட சொத்துக்களுமே இவை.

இவை சட்டவிரோதமான சொத்துக்கள் என்று அடையாளம் காணப்பட்டே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. உரிய விசாரணையின் பின் அந்த சொத்துக்கள் அபகரிக்கப்பட்ட சொத்துக்களாக இருந்தால் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மிகுதி சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும். அல்லது போதை பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருபவர்களின் செலவுக்கு வழங்கப்பட வேண்டும்.அதுதான் சரியானது. காரணம்,அவர்களை போதைக்கு அடிமையாக்கி அதன்மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள்தானே.

அரசு இந்த செயற்பாட்டை வெறும் 6 நாட்களுக்கு மட்டுப்படுத்தக்கூடாது. அவ்வாறு செய்தால் சில நாட்களில் மீண்டும் பழைய இடத்துக்கே நிலைமை சென்றுவிடும்.அதனால் எந்த நன்மையையும் இல்லை.

இதற்கு இறுதி முடிவு கடும்வரை-போதைப்பொருள் வியாபாரத்தை-பாதாள குழுக்களை முற்றாக ஒழிக்கும்வரை அக்ஸன் தொடர வேண்டும்,

அரசு மனது வைத்தால்-பொலிஸார் மனது வைத்தால் குறுகிய காலத்துக்குள் இதை ஒழித்துவிடலாம் என்பதை இந்த 6 நாள் ஆட்டம் நிரூபிக்கிறது.

அரசுக்கு தேவையென்றால் தொடங்குதல்,இல்லாவிட்டால் இடையில் நிறுத்திவிடுதல் என்பதுதான் இப்போதுவரையும் உள்ள நடைமுறை.

அதற்குக் காரணம் அரசின் சில அமைச்சர்களின்-எம்பிக்களின்-பொலிஸ் அதிகாரிகளின் கூட்டாளிகளாக இந்த போதை வியாபாரிகளும் பாதாள குழுக்களும் இருப்பதுதான்.அவர்களின் அழுத்தம் காரணமாகவே ஒப்பரேஷன் இடையில் நிறுத்தப்படுகிறது.பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள்.பழைய படிபோல் வர்த்தகம்-அடாவடி தொடர்கின்றன.

இந்த நிலைமை இனியாவது மாற வேண்டும்.நாட்டு மக்கள்-இளம் சமூதாயம் இந்த போதைப்பொருளால் சீரழிந்துகொண்டு செல்கிறார்கள்.

பல குடும்பங்கள் சீரழிந்து நடுத் தெருவுக்கு வருகின்றன.பணக்காரர்கள் பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர்.இந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த போதை பொருள் பாவனை மக்களுக்கு மேலும் சுமையாகும்.

ஆகவே,போதைப்பொருள் -பாதாள ஒழிப்பு நடவடிக்கையை வெறும் ஆறு நாட்களுக்கு மட்டுப்படுத்தாது அவர்களை ஒழித்துக்கட்டும்வரை தொடர வேண்டும்.

முக்கியமாக,இவ்வாறான ஒப்பரேசனுகள்பற்றி முன்கூட்டியே அறிவிப்பதை பொலிஸார் நிறுத்த வேண்டும்.அது குற்றவாளிகள் தப்பிப்பதற்கு வழிவகுக்கும்.

## பாதாள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அரசால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாரும் விசேட அதிரடி படையும் இணைந்து 17ஆம் திகதி முதல் 22 ஆம் வரை மேற்கொண்ட 6 நாட்கள் விசேட ஒப்பரேஷனின்போதே இந்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுள் வாகனங்கள்,வீடுகள்,காணிகள்,ஹோட்டல்கள்,சுற்றுலா விடுதிகள் பணம் மற்றும் தங்க நகைகள் போன்ற பொருட்கள் அடங்குகின்றன.

## பாதாள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இந்த வளர்ச்சியைத் தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

**ஆனால்,அரசு அது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்த இராணுவ அதிகாரி கவலையடைந்துள்ளார் என்றும் அரச தரப்பு வட்டாரம் தெரிவிக்கிறது.**









# பட்ஜட்

# ஓய்விலுள்ள மஹிந்தவின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி!

–சுஐப்.எம்.காசிம்–

ரணிலின் சவால்மிக்க பயணத்துக்கு கிடைத்த அங்கீகாரமே பட்ஜட் வெற்றி. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்டுக்கோப்புடன் உள்ளமையும் இந்த வெற்றியில் வெளிப்பட்டுள்ளது.

நிறைவேற்றதிகாரம் கைமாறப்பட்ட பின்னர் நடப்பவற்றில் பல, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை புறந்தள்ளுவதாக உள்ளன.

நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் அமைச்சரவை நியமனம், மாவட்ட மற்றும் தொகுதி விடயங்களை கருவறுக்கும் ரணிலின் போக்குகளால் கட்சியின் முக்கியஸ்தர்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர்.

கடிவாளம் கட்சியிடம் உள்ளதால் காலோசித முடிவுக்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன காத்திருப்பதாகவே பலரும் கருதினர். பிறக்கவுள்ள புத்தாண்டு தேர்தலுக்கு வித்திடவுள்ளதால் கட்சி நலன்களே பட்ஜட்டில் செல்வாக்குச் செலுத்துமென்ற ஊகங்களும் உலவின.

ஆனால், பட்ஜட்டின் இரண்டாம் வாசிப்பு நவம்பர் 21 இல், 45 மேலதிக வாக்குகளால் வெல்லப்பட்டதிலிருந்து இந்த ஊகங்கள் நீங்கத்தொடங்கின. இந்த ஊகங்கள் நீங்கத் தொடங்கியதிலிருந்து சில விடயங்கள் துலங்கவும் தொடங்கின.

மஹிந்த ராஜபக்ஷவின் மவுசு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நிலைக்கும் வரை, ரணிலின் மவுசுக்கு மறைமுகக்கரங்கள் பலமூட்டும். ரணிலைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாப்பது, பொருளாதாரத்தை கட்டியெழுப்பி தம்மீதான பழிகளை போக்கிக்கொள்வது. இவையிரண்டும் இந்த அரசாங்கத்தின் இரட்டைச் சக்கரங்கள். இந்த நிலைப்பாட்டில்தான் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வழிநடத்துகிறார் மஹிந்த.

மூன்றாம் வாசிப்பு வெல்லப்படும் வரை மஹிந்தவின் அரசியல் மூளை உறங்கியிருக்காது. உறங்கியிருந்தால் 41 மேலதிக வாக்குகளால் மூன்றாம் வாசிப்பு வென்றிருக்காது.

இதனால்தான், ஓய்வுக்காக வீட்டிலிருக்கும் மஹிந்த, உழைப்போடுதான் ஓய்வெடுப்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. ஐக்கிய தேசிய கட்சியால் ஆட்சியை பிடிக்குமளவுக்கு வளர முடியாதென்பது ஆசிரியரின்றி உணரப்படும் அறிவு போன்றது.

இதனால், ரணிலின் எந்தளவு உயர்வும் ராஜபக்ஷக்களுக்கு பொருட்டில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தலைவரின் வளர்ச்சியையே சவாலெனக் கருதுகின்றனர். வளரும் தலைமைகளுக்குள்தானே போட்டி, வயதாவோருக்கிடையில் இல்லையே!

இதனால்தான், இரண்டு வாக்களிப்புக்களிலும் நாமல் ராஜபக்ஷ பங்கேற்கவில்லை. தென்னிலங்கைத் தளங்களைத் துருவித்துருவி ஆராய்ந்தாலும் காரணத்தை கண்டுகொள்ள முடியவில்லை.

முதுகெலும்புள்ள தலைவராக அடையாளம் காட்டப்படுவதற்காக இவர் பயிற்றப்படலாம் அல்லது பக்குவப்படுத்தப்படலாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 02ஆவது மாநாட்டில் மஹிந்த ஆற்றிய உரைக்குள்ளிருந்த முடிச்சுக்களை இப்போது அவிழ்க்க முடியாது. ஏதாவதொரு தேர்தல் வரைக்கும் மெதமுலானவின் மூடிய அறைக்குள்ளேயே இந்த முடிச்சுக்கள் இருக்கும். எந்தத் தேர்தலுக்கும் தயாரென்கிற மஹிந்த, கட்சிக்கு ஒரு வாரிசைத் தேடாமலா இருப்பார்.

இதேபோன்ற ஒரு பொருளாதார வீழ்ச்சி இந்தியாவில் 1991இலும் தாய்லாந்தில் 1997இலும் ஏற்பட்டது. சர்வதேச நாணய நிதியம், ஜெயிக்கா நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் உதவிகளோடுதான் இந்த நாடுகள் மீண்டெழுந்தன.

இப்போதுள்ள நிலையில், சர்வதேச உதவிகளைப் பெறுமளவுக்கு ராஜபக்ஷக்களின் செல்வாக்குகள் இல்லை. இதனால், ரணிலூடாக காய்களை நகர்த்துகிறது அரசாங்கம். சிறந்த பொருளியல் விவாதத்தை முன்வைத்து பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றினார்.

நுகர்வுகளுக்காக கடன் பெறவில்லை, முதலீடுகளுக்காவே பெறப்படுகிறது. காப்பீட்டு நிதியாக 150 மில்லிய ன் டொலர் கிடைத்துள்ளது. இவற்றினால், நாட்டின் கடன்பத்திரங்களை சர்வதேச நாடுகள் ஏற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வங்கிக் கணக்கில் பணம் இருக்கையில் காசோலை எழுதுவதுபோலதான் இது.

காப்பீட்டு நிதி கையிருப்பிலிருந்தால், கடன் பத்திரங்களை வழங்கி வெளிநாடுகளில் எரிவாயு, எண்ணெய் மற்றும் சீனி போன்ற எதையும் கொள்வனவு செய்ய முடியும். வந்ததை விற்று கடனை செலுத்துவதுடன், காப்பீட்டு நிதியை கையிருப்பாக பாதுகாக்கவும் இயலும். மேலும் 48 மாத விரிவாக்கப்பட்ட கடனாக 337 மில்லியன் டொலரையும் ரணில் கொண்டுவந்துள்ளார்.

இந்த முயற்சிகளுக்கு அரசியல் சாயம் பூசப்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை. நாட்டை பொறுப்பேற்க பயந்தவர்கள், இன்று பிசாசுக் கதைகளை கூறுவதாக பாராளுமன்றத்தில் அவர் சாடியதும் இதைத்தான்.

ஆனால், ஆளும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் எதிரணிகளும் சந்தர்ப்ப சாயங்களைப் பூசிக்கொள்ளப் புறப்பட்டுள்ளன. அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும் என்றிருக்கையில், எவளோ பெற்ற பிள்ளைக்கு யாரோ அழுவது போலுள்ளன ரணிலின் முயற்சிகள்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு கட்டுப்பட்டு கடன்களை கொண்டுவருவதால் வரி, வட்டி, விலைகள் அதிகரிக்கின்றன. இந்த யதார்த்தம் அரசியல்வாதிகளுக்கு புரிந்தாலும் பாமர மக்களுக்கு புரியாமலாக்கும் முயற்சிகளே இன்றைய அரசியலாகியுள்ளன.

பட்ஜட்டை எதிர்த்துப் பேசிய சில கட்சிகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாததும், மறைமுகமாக ரணிலுடன் பேசியதும் ஒரு வகை இயலாமைதான். சில வேளைகளில் மக்களே இந்த நியதிகளை உணரும் நிலை வரலாம்.

# 12 பேருடன் ரொஷான்



அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்கவை தமது பக்கம் ஈர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கிறது என்பது ஒரு கதை.

ஆனால், ரொஷானோ வேறு ஒரு பிளானில் இருக்கிறார்.

இனி தனி ஆளாக களமிறங்காமல் ஓர் அரசியல் கட்சியுடன் –அதன் தலைவர் என்ற மிடுக்குடன் களமிறங்க வேண்டும் என்பதுதான் அவரது ப்லான்.

அதற்காக புதிதாக ஒரு கட்சியை உருவாக்காமல் இருக்கின்ற ஒரு ஒரு கட்சியை வாங்குவதற்கு முடிவெடுத்துள்ளார்.

அதுதான் ருஹுனு மக்கள் கட்சி.

அதற்கான ஏற்பாடு இடம்பெறுகிறதாம்.

அந்த கட்சியுடன் சேர்ந்து –ரொஷானுடன் சேர்ந்து 12 பேர் களமிறங்க உள்ளனராம்.

# இராஜாங்க அமைச்சர் ராஜினாமா



ரோஷன் ரணசிங்க பதவி விலக்கப்பட்ட அதே காலப்பகுதியில் இன்னுமொரு பதவி விலகலும் இடம்பெறவிருந்தது.

அது எப்படி தெரியுமா?

அவர் ஒரு இராஜாங்க அமைச்சர்.முன்பு கேபினட் அமைச்சராக இருந்தவர்.

அவரது அமைச்சுக்கு கேபினட் அமைச்சராக இருப்பவர் இவருக்குத் தெரியாமல் ஜனாதிபதியை சந்தித்து இருக்கிறார்.

இதை கேள்விப்பட்ட இந்த இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி செயலகத்தைத் தொடர்புகொண்டு விசாரித்தபோது அது உண்மைதான் என்று தெரிய வந்தது.

அந்த கேபினட் அமைச்சரும் கூடவே சில அதிகாரிகளும் ஜனாதிபதியைச் சந்தித்து இருக்கிறார்கள்.

நிகழ்வு ஒன்றுக்கு ஜனாதிபதியை அழிப்பதற்காகவே சந்தித்துள்ளார்கள் என்று இராஜாங்க அமைச்சருக்கு தெரிய வந்தது.

கேபினட் அமைச்சர் இந்த சந்திப்புக்கு இவரை கூட்டிப் போகவும் இல்லை அந்த நிகழ்வுக்கு அழைக்கவும் இல்லை.

இதனால் கோபமடைந்த இராஜாங்க அமைச்சர் அமைச்சுப் பதிவை துறப்பதற்கு முடிவு செய்து இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அப்போது ஜனாதிபதி துபாயில். ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து இதுபற்றி கூறியுள்ளார் இராஜாங்க அமைச்சர்.

அவசரப்பட வேண்டாம்.நான் வந்து பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி அப்படியே அந்த மனிதரை ழகக பண்ணிவிட்டாராம் ஜனாதிபதி.



# முட்டி மோதிய ரவி - வஜிர

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ரணில் விக்ரமசிங்கவின் பெயரை அறிவிக்கும் கூட்டம் ஒன்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் சில நாட்களுக்கு முன் இடம்பெற்றது.

கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் அதில் கலந்துகொண்டனர்.

அங்கு வந்தவர்கள் விடயத்தை விட்டுவிட்டு ஏதேதோ பேசப் போய் வீண் பிரச்சினையில் முடிந்தது அந்தக் கூட்டம்.

கட்சியின் மறுசீரமைப்பு பற்றி அங்கு பேசத் தொடங்கினர்.

கொழும்பில் கட்சியை மறுசீரமைப்பது தொடர்பில் பேசப்பட்டபோதுதான் பிரச்சினையே தொடங்கியது.

இதன்போது கட்சியின் கொழும்பு முக்கியஸ்தராக இருக்கின்ற ரவி கருணாநாயக்கவுக்கும் கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்தனவுக்கும் இடையில் சண்டை கொழுவியது.

வஜீரவுக்கு ஆதரவாக கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கே பண்டாரவும் களத்தில் குதிக்க சண்டை உச்சத்தில் போய் முடிவடைந்துள்ளது.

கட்சியின் செயலாளர் பதவியைக் குறி வைத்து ரவி போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



துப்பறிவாளன்

# மெல்ல நழுவிய சஜித்....!!!!



வரவு–செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பு நிறைவுபெற்றதும் எம்பிக்களுக்கு கரம்,செஸ்,பில்லியர்ட்ஸ் போன்ற விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

அதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு சென்ற ஜனாதிபதி வழமைபோல் எதிர்க்கட்சி– ஆளுங்கட்சி எம்பிக்கள் என்ற பேதமின்றி எல்லோருடனும் உரையாடத் தொடங்கினார்.

அப்போது அங்கு வந்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவைப் பிடித்துக்கொண்டார் ஜனாதிபதி.

““ நாங்க உங்கள பத்திதான் பேசிட்டு இருந்தம்...“““ என்றார் ஜனாதிபதி சஜித்தைப் பார்த்து...

““ ஆ....அப்படியா...நான் மக்களுக்காக எதிர்க்கட்சி தலைவர் பதவிய யூஸ் பண்றன் ...““ என்றார் சஜித்.

““ இருந்தாலும்,உங்கட அரசாங்கத்துல நாலக கொடஹேவாதானே நிதி அமைச்சராம்..“““ என்றார் ஜனாதிபதி. சிரித்துக்கொண்டு ...

““ சி...அப்படி ஒண்டுமில்ல...““ என்று கூறி அங்கிருந்து மெல்ல நழுவினார் சஜித்.

# வட கொரியாவுக்கு ஜனாதிபதி அனுப்பும் அரசியல்வாதி யார்?



ஜனாதிபதி அப்படி உரையாடிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்தார் அனுர குமார திஸநாயக்க.

அவருடனும் பேசத் தொடங்கிய ஜனாதிபதி.““ பட்ஜட் கடைசி நாள் நீங்க பேசுவீங்க எண்டு நான் எதிர்பார்த்திருந்தேன்.பேச்ச கேட்க ஆசயா இருந்த ..நீங்க பேசல்லியே..““ என்றார் ஜனாதிபதி.

““ நாங்க எல்லா எதிர்கட்சிகளுக்கும் சேர்த்து பேசுறதுக்கு ஒருத்தர போட்டிருந்தம்.அவர் பேசிட்டார் ...““என்றார் அனுர.

““ அப்படியா ?..அப்ப அவர நாங்க வட கொரியாவுக்கு அனுப்புவம்.அங்கதான் ஒருத்தர் மட்டும் பேசிட்டு இருக்கார்... என்கிறார் ஜனாதிபதி நக்கலாக சிரித்துக்கொண்டு..

# வரி செலுத்தாத எம்பிக்கள்

அரச எம்பிக்களின் கூட்டம் சில நாட்களுக்கு முன் இடம்பெற்றது. அதில் முக்கியமாக வரி அதிகரிப்பு தொடர்பாகவே பேசப்பட்டது.

வரி அதிகரிப்புக்கு எதிராக அவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டனர். வருமான வரி திணைக்களம் உரிய முறையில் வரியை அறவிடுவதில்லை என்று அங்கு கூறினர்.

அதிலும் எம்பிக்களிடமும் அந்த திணைக்களம் சரியாக வரியை அறவிடவில்லை.கொஞ்ச பேர் மாத்திரமே வரி செலுத்தியுள்ளனர். வரி செலுத்தாத எம்பிக்கள் அதிகம் பேர் உள்ளனர். அவர்களிடம் வரியை அறவிட திணைக்களம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சஞ்சீவ எதிரிமான எம்பி கூறினார்.


# நம்மதான் கிங்...மார் தட்டிய மஹிந்த..



மொட்டு கட்சி அந்த 69 லட்சம் வாக்குகள் தங்களுடன்தான் உள்ளன என்ற மாயையில் இருந்து இன்னும் விடுபடவில்லை போல்தான் தெரிகிறது.

சில நாட்களுக்கு முன் ஹில்டன் ஹோட்டலில் திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,மஹிந்த ராஜபக்ச, தெரண முதலாளி திலீத் ஜயவீர மற்றும் வஜிர அபயவர்தன ஆகியோர் ஒரே மேசையில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.



அங்கு அரசியல் பேச்சுக்கள்தான் இடம்பெற்றன.

இந்த ஜனாதிபதி தேர்தலில் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளார்கள் என்று மஹிந்த அங்கு கூறினார்.

எத்தனை பேர் போட்டியிட்டாலும் ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தி மொட்டு கட்சிதான் என்றார் மஹிந்த இறுமாப்புடன்...

தொடர் - 01



# சட்டவிரோமான Spas: சீரழியும் யுவதிகள்

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

அளவுக்கு மீறிய பண ஆசையும் உடல் கவர்ச்சியும்தான் என் அழகான குடும்ப வாழ்க்கையை சீரழித்து விட்டது.இதன் கொடுமையை நான் ஒவ்வொரு நிமிடமும் உணர்கிறேன் என வருத்தப்படும் எஸ்.மனோகரி (வயது37) கடந்த காலங்களில் இரத்தினபுரி நகரிலுள்ள பல்வேறு ஆரோக்கிய நிலையங்களில் இரவுநேர சேவகியாக தொழில் புரிந்த இவர் இன்று தன்னை முழுநேர பாலியல் தொழிலாளியாக மாற்றிக் கொண்டுள்ளார்.

மொனராகலை மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமமொன்றைச் சேர்ந்த மனோகரி விஞ்ஞானப் பிரிவில் உயர் தரம் கற்றவர்.ஆங்கில மொழியில் நன்கு பரிட்சயம் மிக்க மனோகரி சிறந்த அழகும் உடல் கவர்ச்சியும் மிக்கவர்.

ஆரம்பத்தில் இவை மனோகரிக்கு தொந்தரவாக அமைந்திருந்தாலும் பிற்காலங்களில் அவர் அதிக வருமானம் உழைப்பதற்கும்,இலகுவாக ஆண்கள் அவளை நாடி வருவதற்கும் இதுவே காரணமாக அமைந்திருக்கின்றன.

மனோகரியின் கைத்தொலைபேசிக்கு வந்திருந்த தொழில் விளம்பரம் பற்றிய அறிவித்தலொன்றின் ஊடாக இரத்தினபுரி நகரிலுள்ள ஆரோக்கிய நிலையமொன்றில் வரவேற்பு உதவியாளராக தொழில் புரிய ஆரம்பித்த இவள் பின்னர் அங்கு இரவு நேர சேவகியாகவும் பணியாற்ற ஆரம்பித்துள்ளார்.

நீண்டகாலமாக தனது குடும்பத்திற்கும் ஊருக்கும் தெரியாமல் இஸ்பா நிலையங்களில் தொழில் புரிந்து வந்த மனோகரியின் மாற்றங்களை அறிந்து கொண்ட அவளின் குடும்பம் நாளடைவில் அவளுடனான உறவை முழுமையாக முறித்துக்கொண்டனர்.

ஆசை பயம் அறியாது என்பதற்கிணங்க அதிக பணம் தேட வேண்டும் என்று ஆசைப்பட்ட மனோகரி சட்டவிரோதமாக இயங்கி வந்த இஸ்பா நிலையங்களில் தொழில் புரிந்தது மாத்திரமின்றி போதைப்பொருட்கள் பாவனை போன்ற சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட ஆரம்பித்தார். இன்று இரவு இரவு பாலியல் தொழிலாளியாக நடமாடி வருகிறாள்.

## கொரோனா பாதிப்பும் தொழில் இழப்புக்களும்

கௌரவமான அழகான குடும்பமொன்றில் பிறந்து பாரிய எதிர்பார்ப்புக்களுடன் கல்வியைத் தொடர்ந்த போதிலும் என்னுடைய தவறான தீர்மானங்களால் அனைத்தையும் இழந்து தவறான நடத்தைகள் மிக்க ஒரு பெண்ணாக மாறியிருக்கிறேன் என குறிப்பிடும் மனோகரியின் புலம்பல்களுக்குள் சமூகம் உணர வேண்டிய பல உண்மைகளும் புலனாய்வு தேடல்களும் மறைந்திருக்கின்றன.

ஆங்கிலத்தில் ளீயு ஊநவெசநள அல்லது றுநடடநெளள ஊயவெநசள என அடையாளப்படுத்தப்படும் ஆரோக்கிய நிலையங்கள் அனைத்தும் தவறான நிலையங்களும் அல்ல. அங்கு தொழில் செய்கின்றவர்கள் அனைவரும் தவறானவர்களும் அல்லர்.

இலங்கையின் உள்நாட்டு ஆயுர்வேத மருத்துவத் துறையின் நன்மைகளை மக்கள் பயன்பெறும் நோக்குடனும், உள்ளாசப் பயணத்துறையை மேம்படுத்தும் நோக்குடனும் மற்றும் இலங்கையின் பாரம்பரியம் மருத்துவ கலாச்சார பெருமைகளை உலகறியச் செய்யும் நோக்குடனும் பல தசாப்பதங்களுக்கு முன்பிருந்தே நாடலாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள்தான் இவை.

எனினும் அண்மைக்காலமாக மேற்படி ஆரோக்கிய நிலையங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தத் தவறியுள்ளதால் நகரங்களில் மாத்திரமின்றி குக்கிராமங்களிலும் தெருக்களிலும் முறையாக பதிவு செய்யாத நூற்றுக்கணக்கான சட்டவிரோதமான ஆரோக்கிய நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதனால் இலங்கை ஆரோக்கிய நிலையங்கள் தொடர்பான சர்வதேச நன்மதிப்பு குறைந்து வருகிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் நாட்டமும் 13 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதுடன் அரசிற்கு கிடைக்கப் பெற்றுவந்த 8சதவீத வருமானமும் குறைந்துள்ளதாக 2018 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா அதிகார சபையின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக இயங்கிக் கொண்டிருக்கும் சட்டவிரோதமான ஆரோக்கிய நிலையங்கள்(ளியள உநவெசநள) தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்படி ஆய்வு முடிவுகளை உண்மைப்படுத்தும் விதமாகவே பல பொலிஸ் பதிவுகள் உள்ளன.

கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதிக்குரிய இரத்தினபுரி பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் பதிவுப் புத்தகத்தில் இவ்வாறு ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

“இரத்தினபுரி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெ.தேசபந்து இரத்தினபுரி படுகெதரவில் அமைந்திருந்த ஆரோக்கிய நிலையமொன்றில் சிகிச்சை பெற்றுக்கொண்டிந்த நேரத்தில் இறந்துள்ளார்.

53 வயதான இவருக்கு அங்கு வழங்கப்பட்ட முறையற்ற உடலில் சிகிச்சை காரணமாகமே மாரடைப்பு ஏற்பட்டு மரணம் ஏற்பட்படுள்ளது”, எனக் குறிப்பிடும் அவ்வறிக்கையில் மற்றுமொரு இடத்தில் கீழ்வரும் விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


படுகெதரவில் அமைந்துள்ள மேற்படி இஸ்பா நிலையம் சட்டரீதியாக பதிவுசெய்யப்பட்ட நிலையமல்ல. ஆரோக்கிய சிகிச்சை நிலையம் என்ற பெயரில் விபச்சாரமே முன்னெடுக்கப்படுகிறது.

மேற்படி மரணம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற மருவத்துவ அறிக்கைகளின் பின்னர் அந்நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டதுடன் அந்நிலையமும் சீல் வைக்கப்பட்டதாக மேற்படி பொலிஸ் அறிக்கை குறிப்பிடுகிறது.

ஆரோக்கிய நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்டுவரும் இவ்வாறான சட்டவிரோதமான இஸ்பா நிலையங்களால் இலங்கையின் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவத் துறைக்கும் அதன் நற்பெயருக்கும் களங்கமும் அச்சுறுத்தல்களும் நிலவ ஆரம்பித்துள்ளதாக ஆயுர்வேத பல்கலைக்கழக பேராசிரியர்.எஸ். சந்திரா அப்புஹாமி தெரிவிக்கிறார்.

இலங்கையில் அதிகரிக்கத் தொடங்கியுள்ள சட்டவிரோதமான ஆரோக்கிய நிலையங்கள் குறித்து பேராசிரியர் சந்திரா தெரிவித்திருக்கும் மேற்படி கருத்து தொடர்பில் எமது புலனாய்வு தேடல்களை ஆரம்பித்த போது பல திடுக்கிடும் செய்திகள் கிடைக்கப்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

-தொடரும்-





# சவூதியில் அமையப்பெறும் அதி நவீன நகரம்: கித்தியா




(காலித் ரிஸ்வான்)

உலகின் அதி முக்கிய சுற்றுலாத் தளமாக மாறிவரும் சவூதி அரேபியா, விஷன் 2030 திட்டதின் கீழ் பல மேம்பாடுகளை இராச்சியம் பூராகவும் மேற்கொண்டு வருகிறது.

சுற்றுலா, பொருளாதாரம், மருத்துவம், வானவியல் உட்பட சகல துறைகளிலும் அந்நாட்டுத் தலைமையின் வழிகாட்டல்களின் கீழ் சாதனைகள் மற்றும் வளர்ச்சிகளை பதிவு செய்து ஒரு முன்னுதாரண நாடாக வளம் வருகிறது.

அந்த வரிசையில், பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான்,அந்நாட்டுத் தலை நகரில் புதிதாக அமையப்பெறவுள்ள கித்தியா நகரத்திற்கான நகர்ப்புற வடிவமைப்பை வெளியிட்டதோடு, கித்தியாவின் உலகளாவிய வணிக அடையாளத்தையும் கடந்த வியாழனன்று அறிமுகப்படுத்தினார்.

ரியாத் புறநகரில் அமைந்துள்ள கித்தியா நகரானது, அதிநவீன பொழுதுபோக்கு அமசங்கள், விளையாட்டு, கலாச்சார அம்சங்கள் மற்றும் ஆடம்பர நவநாகரிக வாழ்க்கை வசதிகளை வழங்கும் தளமாக உருவாகி வருகிறது. இந்த நகர அமைப்பானது சவூதி மக்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகள் சகலருக்கும் ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் இடமாக உருவாகி வருகிறது.

ரியாத் நகரிலிருந்து 40 நிமிட பயண தூரத்தில் அமைந்துள்ள கித்தியா நகரானது, துவாய்க் மலைப் பாறைகளால் சூழ்ந்த ஒரு அற்புதமான காட்சியமைப்பைக் கொண்டுள்ளது.

இ-விளையாட்டு தளங்கள், ஸ்பீட் பார்க் டிராக், கோல்ஃப் மைதானங்கள் மற்றும் கணிசமான நீர் சார் விளையாட்டுக்கள் உட்பட மேலும் பல புது விதமான அமசங்களைக் கொண்ட ஆடம்பர மையமாக கித்தியா நகரம் காணப்படுகிறது.

10 பில்லியன் சவூதி ரியால்கள் செலவில் அமையப்பெறும் அந்நகரானது, 360 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. 60,000 கட்டிடங்களைக் கொண்டுள்ளதோடு 600,000 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் வரை குடியமர்த்தும் அளவுக்கு வசதிகள் கொண்டது. இந்த நிர்மானம் ஆண்டுதோறும் 48 மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் என அந்நாட்டு அதிகாரிகள் உறிதியளிக்கின்றனர்.

குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இந்நகரில் உலகின் மிகப்பெரிய ஒலிம்பிக் அருங்காட்சியகத்தை நடாத்தும் ஒரு மைதானமும் அமைக்கப்படுகிறது. ஒரே இடத்தில் பல்வேறு விளையாட்டு, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை பொதித்த இவ்வாடம்பர நகர் கித்தியா, உலகின் முக்கியமான சுற்றுலா மற்றும் வணிக தளமாக உருப் பெறுகிறது.

கித்தியா தகரம் 325,000 க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதோடு ஆண்டுக்கு 135 பில்லியன் சவூதி ரியால்கள் வரை புனூ் இனை பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது பற்றி அந்நாட்டு முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் கருத்து தெரிவிக்கையில் "கித்தியா நகரத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் சவூதி விஷன் 2030 திட்டத்தின் அடிப்படை அங்கமாக உள்ளதோடு, இது இளைஞர்களுக்கு



ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதே வேளையில் சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மேலும் வளர உருதுனையாகவும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் பங்களிப்பு செய்யும்" என்றார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டம் கட்டமாக இந்நகரை மக்களுக்காக பாவனைக்கு விடுவதற்கான ஆயத்தங்கள் நடந்த வண்ணம் உள்ளன.

# பெண்கள் மேற்கொள்ளும் பிரத்தியேக சவாரி சேவை




இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற பிரத்தியேக சவாரி சேவை செயலியான ரூடிநச, இலங்கையில் பெண்களுக்கு வலுவூட்டி, பொருளாதார வாய்ப்புக்களை வளர்ப்பதில் பிரத்தியேக சவாரி சேவைத் தளங்கள் வகிக்கின்ற மாற்றத்திற்கான பங்களிப்பு குறித்த ஆழமான விடயங்களைக் கொண்ட முன்னோடி ஆராய்ச்சி அறிக்கை யொன்றை இன்று வெளியிட்டுள்ளது.

"Ride-Hailing: A Platform for Women's Economic Opportunity in Sri Lanka" (பிரத்தியேக சவாரி சேவை: இலங்கையில் பெண்களின் பொருளாதார வாய்ப்புக்கான ஒரு தளம்) என்ற தலைப்பிடப்பட்ட இந்த தொழில்துறை அறிக்கை, பெண்களை இன்னும் கூடுதலான அளவில் தொழிற்படையில் உள்வாங்கும் மாற்றத்திற்கான வகிபாகத்தில் இச்சேவைகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பது தொடர்பான ஒரு விரிவான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

பெண்கள் நிதியியல்ரீதியாக சொந்தக்காலில் நிற்பதற்கு தொழிற்படையில் இணைந்து அல்லது தற்போது ஆற்றுகின்ற பணியில் மேல் மட்டத்திற்கு முன்னேறுவதற்கு எவ்வாறு பிரத்தியேக சவாரி சேவைகள் அவர்களுக்கு முக்கியத்துவமாக உள்ளன மற்றும் அது தொடர்பான எதிர்வுகூறலை இந்த ஆய்வறிக்கை வெளிப்படுத்துகின்றது:

பெண்களுக்கான பிரத்தியேக சவாரி சேவை மூலமாக கொழும்பில் 2028 அளவில் தொழிற்படையில் பெண்களின் எண்ணிக்கை 8% ஆல் அதிகரிக்கும்.

இன்னும் 50,000 க்கும் மேற்பட்ட பெண்கள் கொழும்பில் தொழிற்படையில் இணைந்து கொள்வார்கள்.

இந்த அதிகரிப்பானது நகரத்தின் பொருளாதாரத்தை 3% க்கு மேலாக மேம்படுத்தும்.

# டிஜிட்டல் மாற்றத்தை முன்னெடுக்கும் Softlogic



கடந்த நவம்பர் 16 ஆம் திகதி, தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பு (FITIS), இலங்கையில் இரண்டாவது முறையாக கொழும்பு ஷங்ரி லா ஹோட்டலில் நடத்திய 2023 API ஆசிய மாநாட்டின் பெருமைமிக்க கோல்ட் அனுசரணையாளராக (Gold Sponsor), Softlogic IT இணைந்திருந்தது.

இந்த மாநாடு, AI, FinTech, Smart cities ஆகிய துறைகளில் உள்ள தொழில் வல்லுநர்களின் கூட்டு முயற்சிகளை துரிதப்படுத்தி, டிஜிட்டல் ரீதியில் வலுவாக்கப்பட்ட இலங்கையை உருவாக்குவதன் மூலம் ICT துறையை மாற்றமுறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இம்முறை இம்மாநாட்டின் கருப்பொருள் "டிஜிட்டல் பொருளாதாரத்தை துரிதப்படுத்துதல்" (Fuelling the Digital Economy) ஆகும்.

இம்மாநாட்டில், தொழில்துறை மற்றும் வணிகங்களிலுள்ள தலைவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் பங்கேற்றிருந்தனர்.

டிஜிட்டல் மாற்றம்மூலம், பெருகி வரும் போட்டிச் சந்தையில் தமது நிறுவனங்களை எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பது தொடர்பான பெறுமதியான தகவல்களையே அவர்கள் இங்கு ஆராய்ந்தனர்.

# மதிப்புமிக்க விருதை பெற்ற DIMO

மாலைதீவில் உள்ள DIMO மற்றும் Coastline Investments ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு உறுதியான கூட்டு முயற்சி நிறுவனமான DIMO Coastline Pvt Ltd நிறுவனத்திற்கு, அண்மையில் நடந்து முடிந்த தெற்காசிய வணிக விசேடத்துவ விருதுகளின் 7ஆவது பதிப்பில், 'Best Support Services in the Maritime Industry' எனும் மதிப்பிற்குரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவின், மாலேயில் உள்ள ஷங்ரி-லாவின் JEN Maldives Malé இல் நடைபெற்ற இந்நிகழ்வு, கடல்சார் துறையில் DIMO Coastline நிறுவனத்தின் சிறப்பான பங்களிப்பை எடுத்துக்காட்டும் வகையில், பெருநிறுவன பிரிவில் அதன் சிறந்த சாதனைகளை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதற்கான ஒரு தளமாக அமைந்தது.

DIMO Coastline நிறுவனம், மாலைதீவில் உள்ள விடுதிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு, பொதுப் பொறியியல் சேவைகளை வழங்குதல், கப்பல்களுக்கான நங்கூரமிடல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை அதன் முக்கிய வணிக செயற்பாடுகளாக மேற்கொண்டு வருகின்றது.

திலாபுஷி (Thilafushi) தீவில் நிறுவனம் அதன் அதிநவீன கப்பல்துறையை இயக்குவதோடு, இது தரையிறங்கும் கப்பல்களுக்கு சிறந்த நங்கூரமிடல் வசதிகளை வழங்குவதோடு, விசைப் படகுகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளை முன்னெடுக்கிறது.

இந்த சர்வதேச அங்கீகாரத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்த, DIMO நிறுவனத்தின் குழும முகாமைத்துவப் பணிப்பாளரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கஹநாத் பண்டிதகே, "கடல் பொறியியலில் சிறந்து விளங்குவதற்கான DIMO Coastline நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை, இந்த கௌரவிப்பு உறுதிப்படுத்துகிறது - என்றார்.



# HNB இற்கு பிரச்சார பங்காளர் விருது



இலங்கையின் மிகவும் பல்துறை கொடுப்பனவு பங்காளியாக அதன் நற்பெயரை உறுதிப்படுத்தும் வகையில், முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, தெற்காசியாவின் மிகப்பெரிய e-Commerce தளமான Daraz ஆல், டிஜிட்டல் கட்டண தீர்வுகளை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டது.

வருடாந்தர Daraz Payment Partner Performance யுறயசனள 2023 நிகழ்வில் சிறந்த கார்ட் அடிப்படையிலான பிரச்சார பங்காளருக்கான விருது வங்கிக்கு வழங்கப்பட்டது.

“தொற்றுநோய் பரவ ஆரம்பித்த காலக்கட்டத்தில் துரிதமாக இலங்கையில் டிஜிட்டல் மாற்றத்தின் மாறும் நிலப்பரப்பில், எங்களின் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற மாற்றத்தை உறுதி செய்வதில் HNB ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது.

ஙுயசயண வழங்கும் தொடர்ச்சியான அங்கீகாரம் எங்கள் முயற்சிகளின் வெற்றியைக் காட்டுகிறது. எங்கள் அர்ப்பணிப்புள்ள குழுக்கள் வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்குவதை உறுதிசெய்ய அயராது உழைத்துள்ளன, ஒவ்வொரு விருதுக்குப் பின்னும் திருப்தியான வாடிக்கையாளர் இருப்பதை அங்கீகரித்துள்ளனர்.

HNB இல், டிஜிட்டல் பயணத்தை வெறும் பரிவர்த்தனைகளாக மட்டும் பார்க்காமல் அனுபவமாக பார்க்கிறோம். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற, பலனளிக்கும் அனுபவத்தைத் தொடர்ந்து உருவாக்குவது, டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வுகளில் புதிய அளவுகோல்களை அமைப்பது எங்கள் உறுதிமொழியாகும்.” என HNB கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் தெரிவித்தார்.

# பெந்தோட்டை EKHO Surf: மகிழ்வதற்கான வாய்ப்பு



புனரமைப்புப் பணிகளுக்குப் பிறகு முற்றிலும் புதிய பொலிவுடன் காட்சியளிக்கும் பெந்தோட்டை EKHO Surf, அதன் தனித்துவமான, விசாலமான மற்றும் தங்குதடையற்ற சமுத்திரக் காட்சியை அனுபவிக்குமாறு பிரயாணிகள், விடுமுறை செல்பவர்கள் மற்றும் சமுத்திரத்தை நேசிப்பவர்களுக்கு அழைப்பு விடுகின்றது.

2023 டிசம்பர் 19 அன்று உத்தியோகபூர்வமாக மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த ஹோட்டல் டிசம்பரில் சுற்றுலாப் பருவத்தின் உச்சியில், மிகவும் நேர்த்தியான தருணமொன்றில், இலங்கையின் அழகிய கடற்கரை அழகின் குன்றாத மகிமையுடன், நெகிழ்திறன் மற்றும் பரிமாணத்தின் வரலாறாக தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தகதகவென மின்னும் சூரிய அஸ்தமனம், பஞ்சைப் போன்ற மணல், நன்கு இட வசதிகள் கொண்ட அறைகளுடன் பரந்த புல்வெளி, புத்தம்புதிய கடலுணவு வகைகள் ஆகியவற்றைக் கொண்ட EKHO Surf, உண்மையில் வெப்பமண்டலத்திலிருந்து சற்று விலகி, ஓய்வாக பொழுதைப் போக்க இடமளிக்கின்றது.

1972 ஆம் ஆண்டிலிருந்து இயங்க ஆரம்பித்து, செழிப்பான வரலாற்றைக் கொண்ட ஹோட்டலின் சிறப்பு தொடர்ந்து மேம்பட்டதுடன், நுமுஉமு ளுரசக இன் பயணம் அன்பின் உழைப்பினால் ஆனது. வெறுமனே ஒரு ஹோட்டலைத் தோற்றுவிப்பது என்பதற்கும் அப்பால், இலங்கையின் அழகு மற்றும் அரவணைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தி, அதில் திளைக்கச் செய்யும் அனுபவத்தை வழங்குகின்றது.

# விடுமுறைக் காலத்தில் இனிமையான அனுபவங்களை அள்ளித் தரும் செலான் அட்டைகள்

அனைத்து சமூகங்களும் ஒன்றாகக் கொண்டாடி மகிழும் இந்த விடுமுறைக் காலத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கான இன்றியமையாத அட்டையான செலான் அட்டைகள் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்காக, நாடு முழுவதும் உள்ள பரந்துபட்ட சிறந்த வணிகர்களுடன் இணைந்து, அதன் பருவகால கொண்டாட்டத்தை ஆரம்பித்துள்ளது.

செலான் அட்டைகள், நம்பமுடியாத சலுகைகளை வழங்குவதன் மூலம் நத்தார் மற்றும் புத்தாண்டு ஷாப்பிங்கிற்கான சிறந்த தேர்வாக தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது.

பருவகால அனுபவத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஆடைகள், காலணிகள், accessories, online சலுகைகள் மற்றும் கண் பராமரிப்பு தொடர்பான தீர்வுகள்



என பலதரப்பட்ட பிரிவுகளில் 300இற்கும் மேற்பட்ட முன்னணி வணிகர்களுடன் செலான் அட்டைகள் இணைந்துள்ளது.

இதில் Softlogic Brands, Spa Ceylon, D. Samson & Sons, Hameedia, Cool Planet, Fashion Bug, Nolimit, CIB, Sriyani Dresspoint, Thilakma ஆகிய பல முன்னணி வணிகர்களுடன் மேலும் பலரும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

”இந்த பண்டிகைக் காலத்தில், செலான் அட்டைகள் பலதரப்பட்ட வணிகர்களுடனான இணைவு மூலம் வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான சலுகைகளை வழங்க உற்சாகமாக உள்ளது.

இனிமையான அனுபவங்கள்’ என்ற எங்கள் கருப்பொருள் ஊடாக எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மறக்கமுடியாத தருணங்களை வழங்க உறுதியாக உள்ளமை எங்களின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது” என்று செலான் வங்கியின் அட்டைகளின் தலைவர் ருசித் லியனகே தெரிவித்தார்.

# பன்முகத் தன்மை சம்பியன் விருது




உள்ளடக்கத்துக்கு காண்பிக்கும் அர்ப்பணிப்பை கௌரவிக்கும் வகையில், Sun Match கம்பனி மற்றும் அஷோக குரூப் ஒஃவ் கம்பனிஸ் தவிசாளர் தேசமான்ய பிடிஆர் சூரி ராஜன் அவர்களுக்கு அறிமுக “பன்முகத்தன்மை சம்பியன்” விருது வழங்கப்பட்டிருந்தது.

Women in Management (WIM) மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) ஆகியன இணைந்து தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இந்த நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தன.

சர்வதேச ஆண்கள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது, பணிக் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கடுமையாக உழைக்கும் முன்மாதிரியான செயற்பாட்டளர்களை தெரிவு செய்து அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பன்முகத்தன்மையில் இலங்கையிலிருந்து கௌரவிக்கப்பட்ட சிறந்த 10 சம்பியன்களில் ஒருவராக தேசமான்ய ராஜன் திகழ்ந்தார். தனியார் மற்றும் அரச துறைகளில் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு, சுமுகமான சமூகத்துக்கு பங்களிப்பு வழங்கல் போன்றவற்றுக்கு இவர்கள் ஆற்றியிருந்த அர்ப்பணிப்பான செயற்பாடுகள் கொண்டாடப்பட்டிருந்தன.

# வல்லப்பட்டா அருங்காட்சியகம் திறப்பு



இலங்கை அகர்வுட் தோட்டத் துறையில் முன்னோடியாக விளங்கும் பிந்தன்ன ஹோல்டிங்ஸ் குறிப்பிடத்தக்க வகையில் செயற்பட்டு வருகின்றது முன்னேறுகிறது.

நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் திறப்பு விழா பிந்தன்னா தோட்டத்தில் தொழில்நுட்பம், பிந்தன்னாவின் நினைவுச் சின்னத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

கவர் வெளியீடு. கூடுதலாக, நிறுவனம் தனது இரண்டாவது அகர்வுட் முதலீட்டு வெகுமதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது

பொதுமக்களுக்கும் மதிப்புமிக்க முதலீட்டாளர்களுக்கும், அதன் பயணத்தில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கும். தேசபந்து குமாரின் உன்னத தரிசனத்தில் இருந்து உருவான பிந்தன்ன தோட்டங்களால் ஏற்பாடு செய்யப்பட்டது தர்மசேன, உயர் தொழில்நுட்ப நான்கு மாடி பல்நோக்கு கட்டிடத்தின் திறப்பு விழா இடம்பெற்றது.

# SpaceMax Side-by-Side குளிர்சாதனப் பெட்டிகள் அறிமுகம்




Side-by-Side குளிர்சாதன பெட்டிகள் துறையினில் மேலோங்கி நிற்கும் Samsung நிறுவனமானது, தனது அதிநவீன SpaceMax™ Side-by-Side குளிர்சாதனப் பெட்டிகளை அறிமுகம் செய்வதில் பெருமிதம் கொள்கின்றது.

இரண்டு மற்றும் மூன்று கதவுகள் கொண்ட வடிவங்களில் கிடைக்கப்பெறும் இப்புத்தாக்க வரிசையில், அதன் பாவனையாளர்கள் தமது உணவு வகைகளினை நிர்வகிப்பதிலும் மற்றும் பாதுகாப்பதிலும் தற்போது இருந்து வரும் முறைகளினை மாற்றி அமைப்பதனையே நோக்காகக் கொண்டு அதிநவீன அம்சங்களை அறிமுகப்படுத்துகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையினில் மூன்று கதவு வடிவமைப்பின் ஒரே உற்பத்தியாளர் என்று கூறினால் அது Samsung மட்டுமேயாகும்.

SpaceMax™ வரிசை, குளிர்சாதன பெட்டிகளின் சுவர்கள் மிகவும் ஒடுக்கமானதாக அமைந்திருப்பதானது, அதன் மின்சார சேமிப்புச் செயல்திறனை அதிகரிக்கும் வகையிலான வெளிப்புற அளவுப் பிரமாணங்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட உணவு மற்றும் பானங்கள் பழுதடையாமல் சேமித்து வைக்கக் கூடிய இட வசதி இவை அனைத்தும் எவ்வித சமரசமும் செய்யப்படாமல் அதிநவீன புதுமையான தொழில்நுட்பதின் ஊடகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

SpaceMax™ குளிர்சாதன பெட்டிகளில் இருக்கக்கூடிய மேம்பட்ட All-around குளிரூட்டும் அமைப்பானது மூலோபாய ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஏராளமான சிற்றிடைவெளியூடாக குளிர்ந்த காற்றானது தொடர்ந்தும் சீர் செய்யப்பட்டு சுழட்சிக்கு உட்படுகின்றது.

# Prime Lands Residencies இரட்டை கௌரவிப்பை சுவீகரித்தது




TAGS விருதுகள் 2023 நிகழ்வில் Prime Lands Residencies PLC இரு உயர் கௌரவிப்புகளை தனதாக்கியிருந்தது. காணி மற்றும் சொத்துக் கம்பனிகள் துறை மற்றும் வளர்ந்து வரும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் துறை ஆகியவற்றில் வெள்ளி விருதை தனதாக்கியிருந்தது.

கொழும்பு ஷங்கிரி–லா ஹோட்டலில் நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்வில், Prime Group இந்த உயர் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள TAGS, 57 வருடங்களுக்கு மேலாக இயங்கும் CA ஸ்ரீ லங்காவினால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த நிதி அறிக்கை போட்டியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

நிதி, சூழல், சமூகம் மற்றும் ஆளுகை அறிக்கையிடல் போன்ற பிரதான பெறுமதிகளை உறுதி செய்வதாக இந்த விருதுகள் அமைந்துள்ளதுடன், வருடாந்த அறிக்கைகளை தயாரிக்கும் நிறுவனங்கள் மத்தியில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

"நிலைபேறான வளர்ச்சிக்கு வலுவூட்டல்" எனும் தொனிப்பொருளுக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக Prime Lands Residencies PLC இன் சிறந்த செயற்பாடுகள் அமைந்துள்ளன. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகியன தொழிற்துறை தலைவர்கள் மத்தியில் பெருமளவு வரவேற்பைப் பெற்றுள்ளது.


# புத்தாக்கமான அலுமினிய தயாரிப்புகள் மூலம் வாழ்விடங்களுக்கு மாற்றத்தை வழங்கும் Alumex

Alumex PLC ஆனது, முன்னோக்கிச் சிந்திக்கும், சிறந்து விளங்குகின்ற, கட்டுமானப் பொருட்கள் துறையில் உள்ள Hayleys குழுமத்தின் முதன்மையான நிறுவனமாகும்.

அது தனது தயாரிப்பு வரிசையின் விரிவாக்கத்தை தொடர்ச்சியாக வெளியீட்டு வருகிறது. அன்றாட வாழ்க்கைச் சூழலில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அதிநவீன அலுமினிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி அதன் மூலம் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் சுகவாழ்வை மேம்படுத்த அது முயற்சிக்கிறது.

வசதியை மேம்படுத்த, செயற்பாடு, அழகியல் அல்லது பாதுகாப்பை மேம்படுத்த விரும்பும், வீட்டு உரிமையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது

Alumex. கையடக்கத் தொலைபேசி வைக்கும் தாங்கி முதல் முகம் பார்க்கும் கண்ணாடிகள், பல்தேவை இறாக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பிரத்தியேக தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வீட்டு உபகரணங்களின் தொகுப்புகளை Alumex உருவாக்கியுள்ளது.



# SVAT ஐ ரத்துச் செய்வதற்கான சவால்களுக்கு மத்தியில் பணமில்லா மாற்று முறையின் அவசியம்

இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் (ஞடுயுநுயு) தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்திக்க லியனஹேவகே, எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை (ளுஏயுவு) ரத்துச் செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவினால் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க சவாலை வலியுறுத்தியுள்ளார்.

ஆடைத் தொழிலில் நிதி பரிவர்த்தனைகளை நிர்வகிப்பதற்கான பாதுகாப்பான மற்றும் நவீன முறையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி, பணமில்லா மாற்று முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஞடுயுநுயு இன் 41வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் லியனஹேவகே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். மேலும் 2024ஆம் ஆண்டுக்கான



முழு செயற்குழுவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பணத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "புதிய பணமில்லா முறையை அமல்படுத்துவதற்கு அரசுடன் ஒத்துழைக்க ஆடைத் துறை தயாராக உள்ளது. ளுஏயுவுஐ அகற்றுவதை 2025 வரை ஒத்திவைக்கும் முடிவைப் பாராட்டும் அதே வேளையில், வலுவான மற்றும் வெளிப்படையான பணமில்லா வரி திரும்பப்பெறுதல் அமைப்பு அவசியம்.

மேலும், தொழில்துறையின் நிலையான வளர்ச்சி மற்றும் நெறிமுறை வணிகக் கொள்கைகளுக்கு ஊழலற்ற நிதிச் சூழல் மிகவும் முக்கியமானது." என தெரிவித்தார்.

# சுப்பர் கூல் மெத்தைகள் அறிமுகம்




இலங்கையின் மெத்தை துறையில் நீண்ட காலமாக முன்னிலையில் திகழும் நாமமான ஆர்பிகோ, புதிய சுப்பர் கூல் மெத்தையை அறிமுகம் செய்துள்ளது.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகத் துறையின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு. லலித் விஜேயசிங்க இந்த புதிய சுப்பர் கூல் மெத்தையை அறிமுகம் செய்திருந்தார். இந்த அறிமுக நிகழ்வில் விசேட விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சௌகரியமான உறக்கத்தை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய சுப்பர் கூல் மெத்தைகள், மக்கள் ஓய்வெடுப்பதில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எமது தினசரி வாழ்க்கையில் இனிமையான இரவு நேர உறக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அறிமுகத்தை மேற்கொண்டுள்ளது.

சாதாரணமாக நபர் ஒருவர் தமது வாழ்நாளின் மூன்றில் ஒரு பகுதியை உறக்கத்தில் செலவிடும் நிலையில், சீரான நாளின் இயக்கத்துக்கு இனிய உறக்கத்தின் முக்கியத்துவத்தை ஆர்பிகோ உணர்ந்துள்ளது.

புதிய சுப்பர் கூல் மெத்தையின் நவீன தொழில்நுட்பத்தினூடாக, ஒப்பற்ற சௌகரியம் உறுதி செய்யப்படுவதுடன், மென்மையான ஃபோம் லேயர், குளிர்மையை தக்க வைக்கும் வகையில் பிணைக்கப்பட்ட ஃபோம் லேயர் மற்றும் லேடெக்ஸ் கலந்த கடினமான ஃபோம் லேயர் ஆகிய நான்கு லேயர்களில் ஒய்வுடனான மற்றும் புத்துணர்வூட்டும் உறக்க அனுபவம் உறுதி செய்யப்படுகின்றது.

பாரம்பரியத்துடன் புத்தாக்கத்தை ஒன்றிணைத்து ஆர்பிகோ பரந்தளவு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இது போன்ற உயர் தரமான தயாரிப்புகளை வழங்கி வருகின்றது.